Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 26
வெள்ளிக்கிழமை
22 டிசெம்பர் 2023
மார்கழி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"அப்ப பொதுவேட்பாளர் எண்ட போர்வையில எலக்சனில இறங்க ஐயா பிளான் போடுறார் போல"

# புதிய அரசமைப்பினூடாக தமிழர்களுக்குத் தீர்வாம்!

## தமிழ்க் கட்சிகளிடம் ஒப்பித்தார் ஜனாதிபதி



**கொழும்பு, டிசெம்பர் 22**

**புதிய அரசமைப்பினூடாகத் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

11

## ஜனாதிபதித் தேர்தல்: ரணில் போட்டியிடார்?

கொழும்பு, டிசெ. 22

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்று ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

11

ஜனாதிபதித் தேர்தலில்

## பொது வேட்பாளராக தமிழரொருவர் தேவை

விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 22

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை சிறுபான்மை இனங்களின் சார்பில் பொதுவேட்பாளராக நிறுத்தவேண்டியது காலத்தின் கட்டாயம் என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் இவ்வாறு தெரிவித்தார்.

11

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்;

## நல்லிணக்கக் குழுவில் நம்பிக்கை இல்லை!

கூட்டமைப்பு எம்.பி.க்கள் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 22

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்கான தீர்வாக அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள உண்மைக்கும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவில் கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லை என்று ஜனாதிபதி ரணிலிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

11

டெங்கு கோரத்தாண்டவம்

## 6 நாள்களில் பாதிப்பு 190

யாழ்ப்பாணம், டிசெ. 22

வடமராட்சி பிரதேசத்தில் டெங்குப் பரம்பல் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கடந்த ஆறு நாள்களில் மட்டும் 190 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரேநாளில் 43 டெங்கு நோயாளர்கள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

காங்கேசன்துறை

## துறைமுக அபிவிருத்திக்கு 400 மில்லியன் ரூபா நிதி!

கொழும்பு, டிசெ. 22

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

11

தமிழகத்தில் உள்ள

## ஈழத்தமிழ் அகதிகளை திருப்பியழைக்க குழு!

கொழும்பு, டிசெ. 22

போர்க்காலத்தின்போது இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாகச் சென்று இந்தியாவின் தமிழகத்தில் தஞ்சமடைந்த ஈழத்தமிழ் அகதிகளை, இலங்கைக்குத் திரும்ப அழைப்பதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்

11

## குளத்துக்குள் வீழ்ந்த பெண் சிகிச்சை பயனின்றிச் சாவு!

வவுனியா, டிசெ. 22

வவுனியா பாவற்குளத்துக்குள் வீழ்ந்த இளம் பெண்ணொருவர், சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார். ஜன்சிகா என்ற பெண்ணே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் குளத்துக்குள் வீழ்ந்ததை அவதானித்த மக்கள் உடனடியாகச் செயற்பட்டு பெண்ணை மீட்டதுடன் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். எனினும், செல்லும் வழியிலேயே அந்தப் பெண் உயிரிழந்துள்ளார். இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110-100)

போதை ஒழிப்புத் திட்டம்

## யாழ். மாவட்டத்தில் 102 பேர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 22

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த நான்கு நாள்களில் மட்டும் 102 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 32 பேரும், யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்தில் 70 பேருமாக 102 பேரே இவ்வாறு கைதாகியுள்ளனர். (அ-ம-26)

அத்துமீறிய மீன்பிடி

## 13 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

யாழ்ப்பாணம், டிசெ. 22

அத்துமீறிய மீன்பிடிக்காக நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட 13 இந்திய மீனவர்களையும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

11

## கிணற்றில் தவறிவீழ்ந்து குழந்தையொன்று சாவு!

கிளிநொச்சி, டிசெ. 22

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிக்குடா பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் தவறிவீழ்ந்து ஒன்றரை வயதுக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

புஷ்பராசா மிதுசனா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. குழந்தையின் சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-113-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 6 மாதங்களுக்குள் போதைப்பாவனை ஒழியும்!

### பதில் பொலிஸ்மா அதிபர் நம்பிக்கை

**கொழும்பு, டிசெ.22**
**6 மாதங்களுக்குள் நாட்டில் போதைப்பொருள் பாவனையை ஒழிக்கமுடியும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.**

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே பதில் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மூன்று நாள்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் நாடு முழுவதும் 6 ஆயிரத்து 583 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் தடுப்புக் காவல், மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். சிலர் மீது சட்ட விரோதச் சொத்துக்குவிப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 22
ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பலாலியில் வைத்து இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரின் ரோந்து நடவடிக்கையில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 220மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இளைஞன் சட்டநடவடிக்கைக்காக பலாலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (ச-23)

## போலி விசா நிலையம் நடத்தியவர்கள் கைது!

கொழும்பு, டிசெ.22
குருநாகலில் போலி விசா தயாரிக்கும் நிலையத்தை நடத்தி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

32 மற்றும் 22 வயதுடைய இளைஞர்களே கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவர்கள் 3 வருடங்களாக ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளுக்கான போலிவிசாக்களைத் தயாரித்துப் பல இலட்சம் ரூபாவை மோசடி செய்தனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-6)

## இணையவெளியூடாக இந்த ஆண்டு 98,000 துஷ்பிரயோகங்கள்



கொழும்பு, டிசெ. 22
நாட்டில் 2023 ஆம் ஆண்டில் இணையவெளி (சைபர் ஸ்பேஸ்) ஊடாக 98 ஆயிரம் சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளன என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் திருமதி ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டில் இணையவெளியூடான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக ஒரு இலட்சத்து 46ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்தன.

இதனைத் தடுப்பதற்காகப் பராமரிக்கப்படும் சர்வதேச தரவு அமைப்புடன் இணைந்து பணியாற்றுவதற்குப் பொலிஸார் மற்றும் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த அமைப்பினூடாக சிறுவர் துஷ்பிரயோகம் செய்யும் சமூக ஊடகங்கள் கண்காணிக்கப்பட்டு அவ்வாறான தகவல் அடங்கிய விவரங்கள் சிறுவர்கள் இருக்கும் நாடுகளுக்கு அனுப்பப்படும். இந்தத் தரவு அமைப்பின் ஊடாக இலங்கைக்கும் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

விசேட சுற்றிவளைப்பு

## ரூ.7 கோடி பெறுமதியான வாகனங்கள் சிக்கின!

கொழும்பு, டிசெ. 22
நாடளாவிய ரீதியில் கடந்த வார இறுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது ஏழு கோடி ரூபா பெறுமதியான சட்டவிரோத வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சுற்றிவளைப்பில் 3 ஆயிரத்து 320 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசித்து வரும் நிலையில் நகைக்கடைகள், சுற்றுலா விடுதிகள் காணிகள் போன்றவற்றில் முதலீடு செய்துள்ளனர்.

பாதாள உலகக் குழுவினர் 100 பேர் டுபாய், இத்தாலி, இந்தியா போன்ற நாடுகளில் வசித்து வருகின்றனர்.

இவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார். (ச-6)

பௌத்தமத அவமதிப்பு:

## பேஸ்புக்கிடம் தகவல் கோரும் நீதிமன்றம்!

கொழும்பு, டிசெ.22
பௌத்த மதத்தை அவமதிக்கும் பதிவுகளைக் கொண்ட சமூகவலைத்தளக் கணக்குகள் தொடர்பான தகவல்களைப் பேஸ்புக் நிறுவனத்திடம் கேட்டுள்ளது கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை அடுத்தே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (எ-இ)

## போதைப்பாவனையிலிருந்து இளையோரை மீட்கத் தயார்!

### கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22
போதைப்பொருளுக்கு அடிமையாவோரை மீட்டெடுப்பதற்கான செயற்பாட்டை அனைத்து அரச அதிகாரிகளுடனும் இணைந்து தொடர்ச்சியாக முன்னெடுக்க நாம் தயாராகவுள்ளோம்.

- இவ்வாறு கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த சில்வா யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடற்றொழிலாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மீன்பிடி என்பது கடலைத் தாண்டி ஆறு, குளம் என மீன்பிடியில் ஈடுபடும் மக்களுக்கான தேவைகளையும் நிறைவேற்றுகின்றோம். அதேவேளை போதைப் பொருளுக்கு அடிமையாகும் இளையோரையும் அதிலிருந்து மீட்கவும் நாம் தயாராகவுள்ளோம். அரச அதிகாரிகளுடன் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளோம்- என்றார். (ச-125)

## யுவதிக்காக மோதல்; நால்வர் சிகிச்சையில்

கொழும்பு, டிசெ.22
களுத்துறை, மில்லனிய பிரதேசத்தில் நடந்த குழு மோதலில் நால்வர் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யுவதி ஒருவருக்காகவே இந்த மோதல்நடந்துள்ளதுஎன்றுபொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ-இ)

## விளம்பரம் செய்து நூதனமான மோசடி!

கொழும்பு, டிசெ.22
வாகன விற்பனை தொடர்பாக வார இறுதிப் பத்திரிகையில் விளம்பரமிட்டு கோடிக்கணக்கான பணமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கறுவாத்தோட்டப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகனக் கொள்வனவாளர்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இவர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (எ-இ)

## 920 இலட்சம் ரூபா சொத்துகள் முடக்கம்

கொழும்பு, டிசெ.22
நாடுமுழுவதும் மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் போதைப் பொருள் வியாபாரிகள் பலரின் சொத்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

3 பஸ்கள், 2 கார்கள், 2 மோட்டார்சைக்கிள்கள், மூன்றுமாடி வீடு உட்பட 4 காணிகள், 50 பவுண் தங்கம், ஒரு இலட்சத்து 23 ஆயிரம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. தடைசெய்யப்பட்ட சொத்து மற்றும் பணத்தின் மொத்தமதிப்பு 920 இலட்சம் ரூபா என்று கூறப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணை என்னும் பெயரில் நேரத்தை வீணடிக்கும் ஓ.எம்.பி.!

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

**வவுனியா, டிசெ. 22**

**விசாரணை என்ற போர்வையில் நேரத்தை வீணடிப்பதாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் (ஓ.எம்.பி.) மீது பாதிக்கப்பட்ட உறவுகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.**

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் விசாரணை வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

'ஏற்கனவே இந்த அலுவலகத்துக்கு நாம் பல ஆவணங்களை வழங்கியிருக்கின்றோம். எமக்கு எந்தவித நம்பிக்கையுமில்லை. இதுவரை எமது பிள்ளைகள் தொடர்பாக எந்தவிதமான பதிலையும் இந்த அலுவலகம் வழங்கவில்லை. அவர்களுக்கு வேலை இல்லாதமையால் எமது நேரத்தை வீணடிக்கின்றார்கள்' என்று காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்கள் தெரிவித்தனர். (ஒ-110)

## ஆசிரியர்களுக்கிடையே வவுனியாவில் மோதல்

வவுனியா, டிசெ. 22

வவுனியா சிதம்பரபுரத்திலுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாடசாலையில் பணியாற்றும் 3 ஆசிரியர்களுக்கு இடையில் நேற்று ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறியுள்ளது. ஆசிரியர் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பாக சிதம்பரபுரம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது: சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்காகக் குழுவை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். (ஒ-110)

## ஆபத்தான மரக்கிளைகள் வவுனியாவில் அகற்றம்

வவுனியா, டிசெ. 22

வவுனியா மருத்துவமனைக்கு முன்பாக உள்ள ஆபத்தான மரங்களின் கிளைகள் நேற்று வெட்டி அகற்றப்பட்டன.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள மரங்கள் மிகவும் பழமையானதாகக் காணப்படுவதுடன், அவற்றின் கிளைகள் அண்மையில் முறிந்து வீழ்ந்திருந்தன. இம்மரங்களை அகற்றுமாறு பல்வேறு தரப்புகளால் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து பாதுகாப்புக் கருதி மரங்களின் ஆபத்தான கிளைகள் நேற்று அகற்றப்பட்டன. (ஒ-110)

## மண்வளத்தை அழிப்பதற்கா பக்றீரியா உ.கிழங்கு விதை?

### அடக்குமுறைக்கு எதிராக அமைப்பு கேள்வி

யாழ்.மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படவிருந்த உருளைக்கிழங்கு விதைகள் பழுதடைந்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது எமது மண்வளத்தைச் சீர்குலைக்கும் சதிமுயற்சியா? என யாழ்.ஊடக அமையத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அடக்குமுறைக்கு எதிரான அமைப்பின் செயற்பாட்டாளர் மு.தம்பிராஜா கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவிருந்த உருளைக்கிழங்கு விதையினங்கள் பக்றீரியா நோய்த்தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இவை வழமைக்கு மாறாக இம்முறை அவுஸ்திரேலிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்ட மண்வளத்தைச் சீர்குலைக்க இந்தச் சதிமுயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவே சந்தேகம் எழுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-20)

## புலமைப்பரிசில் விண்ணப்பம் இன்றுடன் நிறைவு

கொழும்பு, டிசெ.22

உயர்தர மாணவர்களுக்கான ஜனாதிபதி நிதியத்தின் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்துக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி இன்றுடன் நிறைவடைகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தன. (எ-இ)

# தீர்வு கிடைக்காவிட்டால் ஜன.1 முதல் போராட்டம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.22

சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தாமதம் ஏற்படுமானால் எதிர்வரும் முதலாம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி நடக்கவுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழுவில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து விசேட மருத்துவர்கள் உட்பட ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் வெளிநாடு சென்றுள்ளனர். மேலும் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மருத்துவர்கள் விரைவில் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் உள்ளது என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

## புதினம் தெரியுமோ?

**ஒராள் வெல்லும்வரைக்கும் ஒருத்தரும் கிட்டவும் வராயினம். வெண்டிட்டால் கதையே வேற. இப்ப எல்லா இடமும் கில்மிஷாவைப் பற்றித்தான் பேச்சு. அந்தப் பிள்ளை இங்க ஒரு இசைக்குழுவில பாடிக்கொண்டிருந்தாலும், இப்பிடி எல்லாருக்கும் தெரிஞ்ச பிள்ளையா பேமஸா இருக்கேலை. அந்தக் காலகட்டத்தில இலங்கையில இருக்கிற ஒரு ரீவி அந்தப் பிள்ளைக்கு போட்ட நிபந்தனையைக் கேட்டால் வாயடைச்சுப் போடுவியள்.**

**எல்லாத்தையும் காசாக்கிப் பாக்கோணும் எண்ட நினைப்பில இருக்கிற அந்த ரீவிக்காரர் கொழும்பிலையும், யாழ்ப்பாணத்திலையும் தங்கட கலையகத்தை வைச்சிருக்கினம். அவைதான் கீரிமலை சிவன்கோயிலில நடக்கிற சிவராத்திரியை நேரடியா ரெலிக்காஸ்ட் செய்யிறவை. இந்தக் கட்டத்தில ஒரு டொக்குமெண்டரிப் படம் எடுக்க வந்த வெள்ளைக்காரர் ஒருத்தர், கில்மிஷாவை வைச்சு ஒரு கோயில பாடுற மாதிரி ஒரு வீடியோ எடுக்க விரும்பியிருக்கிறார். போன வருசம் அந்த நிகழ்ச்சியில கில்மிஷாவும் பாடினதால இந்தமுறையும் பாடவிடுவினம் எண்டு நம்பின பெற்றோர், வீடியோ எடுக்க அந்த வெள்ளைக்காரருக்கு ஓமெண்டிட்டினம். ஆனால் அவை நினைச்சமாதிரி ரீவிக்காரர் அவ்வளவு லேசில இதுக்குச் சம்மதிக்கேலை.**

**'போனமுறை ஆக்கள் இல்லை. அதால இந்தப் பிள்ளைக்கு பாட ஒரு சான்ஸ் குடுத்தம். இந்தமுறை இந்தியாவில இருந்து சுப்பர் சிங்கர்ஸைக் கூட்டிக்கொண்டு வாறம். அந்த மேடையில எப்பிடி இவாவைப் பாட வைக்கிறது. சரி, வேணுமெண்டா இப்பிடிச் செய்வம். ஒரு பத்து லட்சத்தைத் தாங்கோ. அந்த மேடையில நாங்கள் பாடுறதுக்கு சான்ஸ் தாறம்' எண்டு அவையள் டீல் பேசியிருக்கினம்.**

**அந்தப் பிள்ளை பாடக்கேட்டதைக்கூட தங்கட 'ஹப்பிட்டலை' பெருக்கிறதுக்கு காசு வாங்க நினைச்சிருக்கினம். ஆனால் பெற்றோர் அந்த டீலுக்கு ஒத்துக்கொள்ளேலை. பிறகு கோயிலுக்குள்ள வேற பக்கவாத்தியங்களோட கில்மிஷா பாட்டுப்படிச்சு, அதைத்தான் வீடியோ எடுத்தவை.**

**இப்ப அந்தப் பிள்ளை இவையின்ர ரீவியில பாடுறதெண்டால் பத்து லட்சம் குடுத்தாலும் காணாது. அந்தளவுக்கு கில்மிஷாவின்ர பெயரும் திறமையும் எல்லா இடமும் பரவிக்கிடக்கு. ஆனால் அந்தப் பத்து லட்சம் கேட்டவரின்ர பிள்ளை? இப்ப போதைப்பொருள் கடத்திப் போட்டு ஜெயிலுக்க கம்பி எண்ணிக்கொண்டிருக்கிறார். கடவுள் இருக்கிறார் எண்டுறது உண்மைதான் போல.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி (இன்று) மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**




**விலகும் அட்டம சனி**

எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிக்கும் திறமையும் வலிமையும் கொண்ட மிதுன ராசி அன்பர்களே...

அட்டமத்து சனியாக அமர்ந்து இதுவரைப் பாடாய்ப் படுத்திவந்த சனிபகவான் இனி 9ஆம் இடம் சென்று லாபஸ்தானத்தில் அமரப்போகிறார். இதுவரை இருந்துவந்த சிக்கல்கள் அனைத்தும் ஒவ்வொன்றாக விடுபடப் போகின்றன. சம்பந்தமே இல்லாமல் ஏற்பட்ட அவப்பெயர் மாறும். ராசிக்கு 9 ஆம் வீட்டில் ஆட்சிப் பெற்று வலுவாக அமரும் சனிபகவானால் இனி உங்கள் வாழ்க்கை பிரகாசிக்கும். தோல்வியில் இருந்து வெற்றியை நோக்கிய பயணம் தொடங்கும்.

மனதில் சாதிக்கும் வல்லமை பிறக்கும். புதிய வீடு வாங்கும் எண்ணமும் அதற்கேற்ற திட்டமும் தோன்றும். அதற்கேற்பப் பணவரவு உண்டாகும்.

குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் நீங்கும். அமைதியும் நிம்மதியும் பிறக்கும்.

இதுவரை உறவினர்கள் வகையில் இருந்துவந்த மரியாதைக் குறைவான நிலை மாறி நல்ல மதிப்பும் ஏற்றமும் உண்டாகும். உங்கள் வார்த்தைக்கு மதிப்புக்கூடும். கணவன் மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும். பிரச்சினை செய்த உறவினர்கள் விலகிப்போவார்கள். பிள்ளைகள் உங்கள் மனம் போல் நடந்துகொண்டு மகிழ்ச்சி தருவார்கள் மகன் அல்லது மகளின் அயல்நாட்டுக் கல்வி முயற்சிகள் வெற்றியாகும்.

சனிபகவான் உங்களின் 3 ஆம் வீடான சிம்மத்தைப் பார்ப்பதால் செயல்கள் அனைத்தும் அனுகூலமாக முடியும். எதிரிகளின் தொல்லைகள் நீங்கும். ஆதாயம் அதிகரிக்கும். விட்டுப்போன சொந்தபந்தங்கள் தேடிவருவார்கள். சனிபகவான் 11 ஆம் வீடான மிதுனத்தைப் பார்ப்பதால் சாதுரியம் அதிகரிக்கும். திடீர்ப் பணவரவும் வாய்க்கும்.

**வியாபாரம்:** வியாபாரத்தில் இதுவரை இருந்து வந்த நஷ்டமான சூழ்நிலை விலகும். அதிகாரிகள் உங்கள் மனம் போல் நடந்துகொள்வார்கள். புதிய இடத்துக்குக் கடையை மாற்ற வாய்ப்புத் தேடிவரும்.

**உத்தியோகம்:** இதுவரை பணியிடத்தில் இருந்து வந்த அசௌகரியங்கள் நீங்கும். பணிச்சுமை கொஞ்சம் குறையும். உங்களின் திறமை பளிச்சிடும். அதற்கேற்ப சலுகைகளும் உயர்வும் கிடைக்கும். பதவி உயர்வு ஊதிய உயர்வு கிடைக்கும். சக ஊழியர்களின் தொந்தரவுகள் விலகும்.

**மொத்தத்தில் இதுவரை தலைகுனிந்து நடந்த உங்களைத் தலைநிமிர வைப்பதுடன் மனதின் ஆசைகளை எல்லாம் நிறைவேற்றித் தர இருக்கிறது இந்த சனிப் பெயர்ச்சி.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு நல்லபடி முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** ஆதரவு உற்சாகம் தரும். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும் பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். எதிர்பாராத ஆதாயமும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது. பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. உடல்நலனில் அக்கறை காட்டவும். புரிந்துணர்வு அவசியம்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். உறவினர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். தெய்வ வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். சங்கடங்களால் பாதிப்பு இருக்காது.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். உறவுகளுக்காகச் செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். ஆதாயம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்துச் செயற்படுவீர்கள். சகோதரர்களுக்காகச் செலவு செய்யவேண்டிவரும். ஆரோக்கியத்தில்கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். ஆதாயம் உண்டாகும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பார்த்த சுபசெய்தி கிடைக்கும்.

## வவுனியாவில் பரிசில் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 22

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட சித்திரம் மற்றும் கட்டுரைப்போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

'எதிர்கால முயற்சியாளர்களைத் தேடும் அழகிய ஆரம்பம்' எனும் தொனிப்பொருளில் இந்தப் பரிசளிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலாளர் சரத்சந்திர, மேலதிக மாவட்டச்செயலர் திரேஸ் குமார், வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், மாவட்டப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் முகுந்தன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச-110)

## கசிப்புக் காய்ச்சுமிடம்: பொலிஸார் முற்றுகை

முல்லைத்தீவு, டிசெ. 21

முல்லைத்தீவு, முள்ளிவளையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கசிப்புக் காய்ச்சுமிடம் முற்றுகையிடப்பட்டுள்ளது. நாட்டில் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கையின் கீழ் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து முன்னெடுத்த சோதனை நடவடிக்கையில் இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது. இதன்போது 9 பரல்களில் கசிப்பு மற்றும் கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்தப்படும் பொருள்கள் என்பன மீட்கப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கையின்போது முள்ளியவளையில் கஞ்சா விற்பனை செய்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச- 19)

## விபத்தில் ஒருவர் சாவு!

கொழும்பு, டிசெ. 22

கற்பிட்டி - ஏத்தாளைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கற்பிட்டி, பாலக்குடாப் பகுதியைச் சேர்ந்த 37 வயதான குடும்பஸ்தரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மரக்கறிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்துச் சம்பவம் தொடர்பாக கற்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பலத்தைப் பலவீனமாக்கல்

உலகத் தமிழர் பேரவை மற்றும் சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியம் ஆகிய அமைப்புகள் இணைந்து வெளியிட்ட 'இமயமலைப் பிரகடனம்' இலங்கைக்குள்ளும் வெளியிலும் பெரும் வாதப்பிரதிவாதங்களை உருவாக்கியிருக்கின்றது. 'இமயமலைப் பிரகடனத்தை' உள்ளேயும், வெளியேயும் ஆதரிப்போரைவிடவும் எதிர்ப்போரே அதிகம். அந்தப் பிரகடனத்தின் ஆபத்துகளை உணர்ந்து கொண்டுள்ள சிவில் சமூகங்கள் மிகக் காட்டமாக அதை விமர்சித்திருக்கின்றன. தமிழர்களின் வேணவாக்களை குழிதோண்டிப்புதைக்கும் எந்தவொரு நிகழ்ச்சி நிரலுடனும் உடன்படமுடியாது என்பதே யதார்த்தம்.

'உலகமயமாக்கப்பட்டுள்ள முதலாளித்துவ நலன்களுக்கு இசைவாக பூகோள அரசியல் ஒழுங்குகள், தேசிய அரசுகளுக்கு உட்பட்ட அரசியல் சமூக பொருளாதார ஒழுங்குகள் என்பவற்றை முன்னிறுத்தி உள்நாட்டுப்பிரச்சினைகளின் தன்மைகளையும், கதையாடல்களையும் மீளக்கட்டமைப்புச் செய்யும் சர்வதேச அரசியல் அட்டவணைக்கு ஏற்பவே இமயமலைப் பிரகடன முயற்சி நிதியீட்டம் செய்யப்பட்டு அரங்கேற்றப்படுகிறது என்பதை நாம் தெளிவாகப் புரிந்துள்ளோம். உலகெங்கும் வாழும், அரசியல் பொருளாதார அடக்குமுறைக்கு உட்படும், நேரடியான அரசவன்முறைக்கு உட்பட்டுவரும், அரசற்ற தேசிய இனங்கள், விளிம்பு நிலை மக்கள் எனப் பல்வேறுபட்ட தரப்பினரை குரலற்றவர்களாக மாற்றும் பெரும் கருத்தியல் மேலாதிக்கத் திட்டங்கள், குறித்து நாம் விழிப்புடன் இருக்கிறோம்' என்று சிவில் சமூக அமைப்புகள் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

இமயமலைப் பிரகடனம் என்பது வெறுமனே உலகத் தமிழர் பேரவையினதோ அல்லது சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியத்தினுடையதோ இல்லை என்பது வெளிப்படையானது. அதைச் சிவில் சமூகம் சுட்டிக்காட்டியிருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியில் அசுர பலத்துடன் கோலோச்சிய எல்லாக் காலங்களிலும், பூகோள அரசியல் சக்திகள் - வல்லரசுகள் என்பன சமாதானத்தின் பெயரால் அவர்களை வலிமை இழக்கச் செய்வதற்கு முயற்சித்தன என்பதும் கடந்த காலப் பட்டறிவுகள்.

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய ஒரேயொரு தரப்பு புலம்பெயர் சமூகம் மாத்திரமே. இந்தியாவோ, அமெரிக்காவோ, ஐ.நா.வோ தமிழர்களுக்கான நீதியையோ, தீர்வையோ பெற்றுத் தரப்போவதில்லை. மாறாக தங்கள் தேவைகளுக்காகத் தமிழர்களை 'கறிவேப்பிலையாகப்' பயன்படுத்திவிட்டுப்போவார்கள். தமிழர்களின் மிகப்பெரிய பலம் புலம்பெயர் சமூகம். அதுவும் இலங்கை தற்போது சிக்கிக்கொண்டுள்ள மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டுவிடக்கூடியளவுக்கான பலம் புலம் பெயர் சமூகத்திடம் உண்டு. இத்தகைய சூழமைவு, பேரம் பேசுவதற்கான வலிமையை தமிழர் தரப்புக்குப் பெற்றுத்தரும்.

இலங்கையின் ஆட்சியாளர்கள் புலம்பெயர் சமூகங்களை நோக்கி வலை வீசிக்கொண்டேயிருக்கின்றார்கள். இலங்கையின் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்தொண்டமான் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள புலம்பெயர் தமிழர்களைச் சந்தித்து முதலீடு செய்யுமாறு அழைக்கின்றார். ஜனாதிபதியின் ஆலோசகர்களுள் ஒருவரான சாகலவும் புலம்பெயர் சமூகத்தை முதலீடு செய்யுங்கள் என அழைக்கின்றார். இலங்கைக்கு புலம்பெயர் சமூகத்தின் உதவி தேவை.

புலம்பெயர் சமூகம் இலங்கை அரசாங்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வை 'கருவியாகப்' பயன்படுத்தாமல் இருப்பதற்காக, புலம்பெயர் சமூகத்தைப் பிரித்தாளுவதற்கான வேலைத்திட்டத்தையும் ரணில் அரசாங்கமும், பூகோள மற்றும் வல்லரசுகளும் இணைந்து முன்னெடுக்கின்றன. அதன் ஓர் அங்கமாகவே இமயமலைப் பிரகடனத்தையும் நோக்க வேண்டியிருக்கின்றது. ஒப்புக்குசப்பாணியாக தீர்வு என்ற பெயரில் எதையாவது புலம்பெயர் சமூகத்தின் இணக்கத்துடன் பெற்றுக்கொடுத்து, அவர்களின் முதலீடுகளை உறிஞ்சலாம் என்று திட்டமிடுகின்றன.

இலங்கைத் தமிழர்களும், புலம்பெயர் சமூகமும் ஒரே நேர்கோட்டில் நின்று இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாக இருந்தால், நிச்சயமாக பேரம் பேசுவதற்கான வலு அதிகரிக்கும். அதைச் சரியாகக் கையாள்வதே இன்றைய தேவை.




# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இலங்கைக்கு நீண்டகாலம் தேவை!

## செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சர்வதேசப் பேரவை சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ.22**

**சீர்குலைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இலங்கை இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்று செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சர்வதேசப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.**

எரிபொருளுக்கான நீண்ட வரிசைகள், பல மணிநேர மின்வெட்டு, எரிவாயுத் தட்டுப்பாடு என்பன தற்போது முடிவுக்குக் கொண்டுவரப் பட்டாலும், வழமைக்கு மாறான பணவீக்கத்தால் பல மில்லியன் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சர்வதேசப் பேரவை குறிப்பிட்டுள்ளது.

இந்த நெருக்கடியானது நாட்டின் மொத்தச் சனத்தொகையின் பெரும்பான்மையானோர் வறுமை, நலிவுற்றநிலை போன்றவற்றுக்கு முகங்கொடுப்பதற்குக் காரணமாகியுள்ளது என்றும் பேரவையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பொருளாதாரம் 3 வீதம் வளரும்!

கொழும்பு, டிசெ.22

2023ஆம் ஆண்டு பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தாலும், அடுத்த ஆண்டு பொருளாதாரம் 3 வீதத்தால் உயர்வடையும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நெருக்கடியில் இருந்து வெளியே வந்து சரியான பாதையில் இலங்கை செல்கின்றது. இஸ்ரேல் - காஸா போர் காரணமாகச் சில பாதிப்புகள் ஏற்படலாம். எண்ணெய் விலைகள் அதிகரிக்கக் கூடும். எண்ணெய் விலையே அடுத்த ஆண்டு பெரும் சவாலாக இருக்கும். அடுத்த ஆண்டு பொருளாதாரத்தில் தளர்வு இருக்கும். அந்நியச் செலாவணி வருவாய் பொருளாதாரத்துக்குப் பலமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# இன்று விடுமுறை

கொழும்பு, டிசெ.22

அரச மற்றும் அரச அனுசரணையில் இயங்கும் தனியார் பாடசாலைகளுக்கான 2023 ஆம் ஆண்டு மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட விடுமுறை இன்று முதல் வழங்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, புதிய கல்வி ஆண்டின் புதிய கல்வித் தவணை நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# இலங்கை வந்தார் சந்தோஷ் ஜா

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராகப் பொறுப்பேற்கவுள்ள சந்தோஷ் ஜா நேற்றுமுன்தினம் கொழும்பு வந்தடைந்தார். நற்சான்றிதழ்களைச் சமர்ப்பித்த பின்னர் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். இதுவரை இலங்கைக்கான இந்தியத் தூதுவராகச் செயற்பட்ட கோபால் பாக்லே அவுஸ்திரேலியாவுக்கான இந்தியாவின் தூதுவராகப் பதவியேற்கவுள்ளார். (எ-இ)

## நாளை

23.12.2023
**சனிக்கிழமை**
**மார்கழி 07**
சுபநேரம் : 03.25 - 04.55
ராகுகாலம் : 09.25 - 10.55

சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்

## நாளொரு நல்வார்த்தை

**உங்கள் கைகளை சட்டைப்பையில் வைத்துக்கொண்டே, வெற்றி எனும் ஏணியில் உங்களால் ஏறமுடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

**- அர்னால்டு-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தோல்வியடைய ஆளுநர் நியமனமும் காரணம்

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.22**

**இலங்கையில் மாகாணசபை முறைமை தோல்வி அடைந்த முறைமையாக இருப்பதற்கு அரசியல் அடிப்படையிலான ஆளுநர் நியமனமும் பிரதான காரணமாகும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாகாணசபைகளில் உள்ள பிரதான பிரச்சினைகளில், எவரை வேண்டுமானாலும் ஆளுநராக நியமிப்பதற்கு இருக்கும் அதிகாரமானது பிரதான பிரச்சினை யென்பது எனது கருத்து. அத்துடன், ஆளுநர்கள் தமக்குத் தேவையான வகையில் செயற்பட முற்படுகின்றமையும் அடுத்த பிரச்சினையாகும்.

அரசியல்வாதிகளே ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர். மாகாணசபை முறைமை பலவீனமான தோல்வி அடைந்த முறைமையாக இருப்பதற்கான காரணிகளுள் இதுவும் ஒன்றாகும். மத்திய அரசுக்குத் தேவையான விதத்தில் ஆளுநர்கள் செயற்படும் நிலைமை காணப்படுகின்றது. இதனால்தான் மாகாணசபை முறைமைமீதான நம்பிக்கை இல்லாமல்போனது- என்றார். (எ-44)



# மழை வெள்ளத்தால் போக்குவரத்துப் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாகப் பெய்த அடைமழையால் காரைநகர் சுற்றுவட்டப் பிரதான வீதியை மழை வெள்ளம் மூடியமையால் கடந்த செவ்வாய்க்கிழமை போக்குவரத்து பாதிப்படைந்தது. இதனையடுத்து காரைநகர் பிரதேசசபையில் திட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் நெறிப்படுத்தலின் கீழ் பிரதேசசபையின் ஊழியர்களால் வடிகால்களை சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ரி-66)



# பாலியாறு பெருக்கெடுப்பு வவுனிக்குளத்தில் பயிரழிவு

முல்லைத்தீவு, டிசெ. 22

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பாலியாறு பெருக்கெடுத்ததன் காரணமாக வவுனிக்குளத்தின் கீழான 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மேட்டுப் பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளது. அத்துடன் வெள்ள இடரால் 25க்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்துள்ளன. (ச-13)

# டெங்கு ஒழிப்பு சிரமதானம்

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்.மாவட்டச் செயலகத்தின் டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டின் சுற்றறிக்கைக்கு அமைய நேற்று காரைநகர் பிரதேசசபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களால் காரைநகர் பிரதேசசபையின் தலைமை அலுவலகம் மற்றும் வலந்தலை சுற்றுவட்ட வீதி வரையான இடங்களில் டெங்கு ஒழிப்புச் சிரமதானச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (எ-66)



# அக்கராயன்குளம் வான் பாய்கிறது

கிளிநொச்சி, டிசெ. 22

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன்குளம் வான்பாயத் தொடங்கியுள்ளது.

வான் பாய்கின்றபோது ஆண்டுதோறும் அக்கராயன் தாம் பாலம் ஊடாகப் போக்குவரத்துத் தடைப்படும். நிலைமை சீராவதற்கு இரு நாள்கள் காத்திருக்கவேண்டிய நிலைமை காணப்படும்.

தற்போது ஸ்கந்தபுரம், கோணாவில் வீதி புனரமைக்கப்பட்டதன் காரணமாக போக்குவரத்துகள் பாதிப்பில்லாமல் நடைபெறுகின்றன. (ரி-13)





# மதவாளசிங்கன்குளத்தைப் பாதுகாக்க ஏற்பாடு

முல்லைத்தீவு, டிசெ. 22

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று, மதவாளசிங்கன் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து உடைப்பெடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அணைக்கட்டை வெட்டி, குளத்தின் நீர் வழிந்தோடுவதற்கான வசதி உருவாக்கப்பட்டது. நீர்ப்பாசனத் திணைக்களத்தினரின் ஒருங்கிணைப்பில், விவசாயிகள், நன்னீர் மீனவர்கள் இணைந்து குளம் உடைப்பெடுக்கும் அபாயத்தைத் தவிர்த்தனர். (ரி-13)





# உழவியந்திரம் மூலம் மீட்கப்பட்ட மக்கள்

## கிளிநொச்சி மேற்கில் சம்பவம்

வன்னேரிக்குளம், டிசெ. 22

கிளிநொச்சி மேற்குப் பகுதியில், மழை வெள்ளத்தால் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், பூநகரிப் பிரதேசசபையின் உழவியந்திரங்கள் மூலம் மக்களை மீட்கும் பணி நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி, வேரவில், பாலாவி ஆகிய ஐந்து கிராமங்களுக்குள் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்குப் பெருந்துச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதையடுத்தே உழவியந்திரங்களால் மக்களை மீட்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடைப்பெடுக்கும் ஆபத்தில் அம்பலப்பெருமாள் குளம்!

## புனரமைத்துத் தருமாறு விவசாயிகள் வலியுறுத்து

**முல்லைத்தீவு, டிசெ. 22**

**முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் உடைப்பெடுக்கும் அபாயக் கட்டத்தில் இருப்பதால் மண்மூடைகள் அடுக்கி உடைப்பெடுப்பதிலிருந்து பாதுகாக்க வேண்டியுள்ளது என்று கிராம விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரதான குளங்களில் ஒன்றாக விளங்கும் இந்தக் குளத்தினூடாக காலபோகத்தில் 525 ஏக்கருக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளமுடியும். இந்தக் குளத்தை நம்பி 110 குடும்பங்கள் வரையில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இந்தக் குளம் புனரமைப்புச் செய்யப்படாமையால் ஆண்டுதோறும் மழைக் காலத்தில் விவசாயிகள் ஒன்றுதிரண்டு குளத்தின் அணைக்கட்டுக்கு மண் மூடைகளை அடுக்கி உடைப்பெடுப்பிலிருந்து குளத்தைப் பாதுகாக்க நேரிடுகிறது. குறித்த குளத்தை புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியபோதும் நிதிகிடைக்கப்பெற வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. சொற்ப நிதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தொடங்கப்பட்ட வேலைகள் கூட முழுமைபெற வில்லை என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ச-13)

## குருபூசையும் சொற்பொழிவும்

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடத்தப்படும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 37 (சாக்கிய நாயனார்) சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீநாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சைவப்புலவர் பொன். சந்திரவேல் "செங்கல்லாலேயே அர்ச்சித்த நாயனார்'' எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ரி)



## குளம் வான்பாய்வால் போக்குவரத்தில் இடர்

கிளிநொச்சி, டிசெ. 22

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் வான்பாய்வதன் காரணமாக கிளிநொச்சி மேற்கு கிராமங்களுக்கானபேருந்துச்சேவைகள்துண்டிக்கப்பட்டுள்ளன. வன்னேரிக்குளம், ஜெயபுரம் வீதியில் இரு இடங்களில் வன்னேரிக்குள வான் வெள்ளம் வீதியை குறுக்கறுத்துப் பாய்கின்றது.

அக்கராயனிலிருந்து வன்னேரிக்குளம் வரையான வீதி மற்றும் வன்னேரிக்குளத்திலிருந்து ஜெயபுரம், பல்லவராயன்கட்டுச் சந்தி பாலாவி வரையான வீதி ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டதன் காரணமாகவே இந்த இடர்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர். (ச-13)



## வெள்ளத்தால் பாதிப்பு: உலருணவு கையளிப்பு

கிளிநொச்சி, டிசெ. 22

கிளிநொச்சி மாவட்டத்தில், வெள்ளப் பேரிடரால் அதிகூடிய பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள 275 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்றுமுன்தினம் கையளித்தார்.

கனடா நாட்டில் வசிக்கும் சமூக ஆர்வலரான சுரேஸ் மகேந்திரன் நிதியுதவியில் முதற்கட்டமாக இந்த நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. (ச-125)

## டெங்கைக் கட்டுப்படுத்த கொள்கலன் சேகரிப்பு!

### யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நாளை இடம்பெறும்

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட டெங்கு பெருகும் அபாயம் உள்ள பிரதேசங்களில் ஒன்றிணைந்த கொள்கலன் சேகரிப்புச் செயற்பாடு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தச் செயற்பாட்டில் யாழ்.மாநகரசபையின் சகல கழிவகற்றும் உழவு இயந்திரங்களும் ஈடுபடும் என்றும், கீழ்வரும் கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள பொதுமக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் உள்ள கொள்கலன்களையும் ஏனைய தண்ணீர் தேங்கக்கூடிய பொருள்களையும் சேகரித்து கழிவகற்றல் வாகனத்தில் ஒப்படைக்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

ஜே/103, ஜே/107, ஜே/97, ஜே/102, ஜே/100, ஜே/95, ஜே/91, ஜே/87, ஜே/83, ஜே/86, ஜே/85, ஜே/63, ஜே/62, ஜே/70, ஜே/72, ஜே/78, ஜே/75, ஜே/77, ஜே/79, ஜே/81 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-17)

## புதிய தவணையில் பெற்றோர் சந்திப்பு

அடுத்த வருடத்துக்கான முதலாம் தவணைப் பாடசாலைகள் ஆரம்பமாகும்போது பெற்றோருடனான சந்திப்புக் கட்டாயம் நடத்தப்படவேண்டும். இந்தக் கலந்துரையாடல் பாடசாலைகள் ஆரம்பித்து இரண்டு வாரங்களுக்கு இடம்பெறவேண்டும் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பெற்றோருக்கும் வகுப்பாசிரியர்களுக்கும் இடையேயான உறவை வளர்க்கும் முகமாக இந்தக் கலந்துரையாடல் அவசியம்.

பல புதிய கல்விசீர்திருத்தங்கள் அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் கல்வியமைச்சர் தெரிவித்தார். (ச-6)

## தொழில்நுட்பக் கல்லூரியின் கற்கைகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டுக்கான என்.வி.கியூ. சான்றிதழ் தர (மட்டம்-3,4) மற்றும் என்.வி.கியூ. டிப்ளோமா தர (மட்டம் 5,6) கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முழுநேரக் கற்கைநெறிகள் இலவசமானவை.

தரம் 10 தகைமை உடையோர் முதல் க.பொ.த. உயர் தர தகைமை உடையோர் வரை கற்கக்கூடிய கட்டட நிர்மாணத்துறை, தன்னியக்க இயந்திரவியல், மின் மற்றும் இலத்திரனியல், வர்த்தகம் மற்றும் மொழித்துறை, கணினிசார் தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல் போன்ற துறைகள் சார்ந்த 43 கற்கைநெறிகளுக்கும் மேலதிகமாக மாணவர்களை அனுமதிக்கக் கூடியதாக உள்ளது.

மேற்படி கற்கைநெறியை பயிலவிரும்புவோர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களை dtet.gov.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம் அல்லது தொழில்நுட்பக்கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் நேரடியாகவோ 021 222 0028, 021 222 2358 எனும் தொலைபேசி இலக்கங்களூடாகவோ பெற்றுக்கொள்ளலாம். (ச)

## சென்.ஜோன் அம்புலன்ஸ் படையணி உருவாக்கம்

*யாழ்ப்பாணம், டிசெ. 22*

*சென்.ஜோன் அம்புலன்ஸ் படையணி உருவாக்கம் யாழ். மாவட்ட ஆணையாளர் எட்வாட் டிலிஷானின் ஆலோசனை வழிகாட்டலுடன் கல்லூரி அதிபர் திருமதி லலிதா முகுந்தன் தலைமையில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.*

*இந்த நிகழ்வில் சென்.ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட உதவி ஆணையாளரும் சிரேஷ்ட முதலுதவிப் பயிற்றுவிப்பாளருமாகிய சோ.ஈழநேசன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (ரி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 10 . 1956



மறைவு 02 . 01 . 2023

### அமரர் திருமதி சுப்பையா பூமாதேவி

அன்பாலும் பண்பாலும் எங்களை அரவணைத்து
நல்வழிப்படுத்திய எங்கள் அன்புத் தாயே !
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை தெய்வமே !
உங்கள் பிரிவின் துயரம் - நினைவலைகள்
உருவமாய் இல்லை என்றபோதும்
தெய்வமாய் எங்களுடனேயே என்றும்
வாழ்ந்து கொண்டிருப்பீர்கள் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கைதடி தெற்கு, கைதடி.
0754169276

உங்கள் நினைவுகளோடு வாழும்
– குடும்பத்தினர்



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் அழகரத்தினம் சுபாஸ்கரன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

திதி: வளர்பிறை தசமி (22.12.2023)

ஆண்டு ஒன்று ஆனபோதும் அப்பா
உங்கள் நினைவுகள் ஆறவில்லை
எம் துயர் எத்தனை ஆண்டுகள்
சென்றிடினும் உங்கள் நினைவுகள்
எங்கள் மனதில் நீங்காது நிலைத்திருக்கும்
அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்!

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 41328) S-1


புதுக்குடியிருப்பில்

# போதை வியாபாரி மடக்கிப் பிடிப்பு!

முல்லைத்தீவு, டிசெ. 22

புதுக்குடியிருப்பு பகுதியில் இளைஞர்களையும் பாடசாலை மாணவர்களையும் இலக்கு வைத்து போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்ட நபரொருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 300 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள், மாணவர்கள், இளைஞர்களை இலக்கு வைத்து அந்தநபர் போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றார் என்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-19)

வடமராட்சியில் தேடுதல்

# போதைப்பொருளுடன் ஆறு பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம்,வடமராட்சி-நெல்லியடி பொலிஸ் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது பல இலட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டதுடன், அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான ஆறு பேரில் இரண்டு பேர் பெண்கள். கைதானவர்களிடமிருந்து சுமார் 6 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கஞ்சா, நூறு லீற்றர் கசிப்பு மற்றும் இதர போதைப்பொருள்களும் அத்துடன் ஐந்து வாள்களும் மீட்கப்பட்டுள்ளன. (ம-27)


## 12ஆம் ஆண்டு நினைவலைகள்



வைத்திய கலாநிதி
மரிசலீன்பிள்ளை
மரியதாசன் (JP)
(பேரின்பம் - வல்வெட்டித்துறை)
(யாழ். மாநகரசபை சுகாதார
வைத்திய அதிகாரி)
(MOH - 2001 - 2011)

மண்ணில்
12.07.1942

விண்ணில்
22.12.2011

ஆவேமரியா,
72, கோயில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

என்றென்றும் நினைவுகளுடன்
யாழ். மாநகரசபை சுகாதாரப்பிரிவு
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
உறவினர்கள், மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரக்குழந்தைகள்,
தேசன், யோவான் அருணன்,
ஆன்கிறிஸ்ரா, அருள், விக்ரறினா.



## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 11 . 1954



மறைவு 16 . 12 . 2023

### இராமுப்பிள்ளை அசோகநாதன்

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை அசோகநாதன் கடந்த (16.12.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 53243) N-1


# கசிப்புடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 22

கொடிகாமம் பகுதியில் 375 மில்லிலீற்றர் கசிப்புடன் இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம், தவசிக்குளம் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான நிலையில் பயணித்த நபரை இடைமறித்துச் சோதனையிட்டபோதே அவரின் உடைமையில் கசிப்பு இருந்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெங்கு பரவும் ஏதுநிலை ரூ. 5 மில்லியன் தண்டம்

**கொழும்பு, டிசெ.22**
**டெங்கு பரவும் வகையில் சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருந்தவர்களுக்கு வழங்கப்பட்ட அபராதத்தின் மூலம் சுமார் 5 மில்லியன் ரூபா அரசுக்குக் கிடைத்துள்ளது என்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் விசேட மருத்துவ நிபுணர் ருவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.**

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பற்ற மற்றும் டெங்கு பரவும் அபாயத்துடன் தூய்மையற்ற முறையில் வைத்திருந்த சுமார் 16 ஆயிரத்து 860 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த வருட ஆரம்பம் முதல் தற்போதுவரை 7 இலட்சத்து 16 ஆயிரத்து 213 இடங்களில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட 16 ஆயிரத்து 860 இடங்களில் ஆயிரத்து 788 இடங்களில் முட்டைகள் இட்டு நுளம்புகள் இனம்பெருக்குவதற்குத் தயாராக இருந்தன. டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது, 4 ஆயிரத்து 332 இடங்களுக்குரியவர்களுக்கு எச்சரிக்கை துண்டுப்பிரசுரம் வழங்கி முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது. 808 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்து பணம் அறவிடப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# தொழில்நுட்பப் புரட்சிக்கு அழைக்கின்றார் ரணில்!

கொழும்பு, டிசெ. 22
இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் வகையிலான விரிவான மூலோபாய அடிப்படையில் நாம் செயற்பட வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து தற்போதைய சவால்களை எதிர்கொண்டால் அடுத்த ஒரு சில வருடங்களில் பொருளாதார சுபீட்சத்தையும் பொருளாதார சவால்களை வெற்றிகொள்ளமுடியும்.

அவர் மேலும் உரையாற்றியதாவது:-
சர்வதேச நாடுகளுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் இலக்கை அடைவதற் ன போட்டியை முறியடிக்கும் வகை , இலங்கை தற்போது முழுமையான டிஜிற் மயமாக்கலில் ஈடுபட்டுள்ளது.

அதன்படி, டிஜிற்றல் பரிமாற்ற முகவர் நிலையம் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான ஆராய்ச்சி மையமும் (AI) இணைந்து செயற்படுகின்றன. பசுமைப் பொருளாதாரமாக மாறுவதற்கான முயற்சிகளுடன், உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத்தை நவீனப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு கட்டியெழுப்பப்படும் தொழில்நுட்பங்கள் மற்றும் கைத்தொழில்களை மூலதனமாக வைத்து பிராந்திய விநியோக மையமாக மாறுவதற்கு இலங்கையும் எதிர்பார்க்கிறது. இதன்போது, நிதி ஒழுக்கத்தை உறுதி செய்வதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து தற்போதைய சவால்களை எதிர்கொண்டால், அடுத்த ஐந்தாறு வருடங்களில் இலங்கையின் பொருளாதார சுபீட்சத்தை உறுதிசெய்யமுடியும் - என்றார். (ச-44)

# ஜனாதிபதித் தேர்தல்; களைகட்டும் தென்னிலங்கை

தென்னிலங்கையிலுள்ள மூன்று பிரதான கட்சிகள் இதுவரை தமது கட்சிகளின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்களை அறிவித்துள்ளன.

அத்துடன், சில சிறுகட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி வேட்பாளர் போட்டியிடவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ களமிறங்குவார், இதுவே கட்சியின் உறுதியான நிலைப்பாடு என்று நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்கவை களமிறக்குவதற்கு அந்தக் கட்சியின் நிறைவேற்றுக்குழு முடிவெடுத்துள்ளது.

தமது கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க எனவும், அவர் பொது வேட்பாளராகக் களமிறங்குவார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. பிரதான அரச பங்காளிக்கட்சியான பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தல் குறித்து இறுதியான- உறுதியான முடிவை இன்னும் எடுக்கவில்லை. (ஒ-44)

# இஸ்ரேலில் தொழில்வாய்ப்பு இலங்கையர் அனுப்பிவைப்பு

கொழும்பு, டிசெ. 22
இருநாட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இஸ்ரேலில் விவசாயத்துறையில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவதற்காக இலங்கையிலிருந்து 80 பேர் 3 குழுக்களாக இஸ்ரேலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் முதற்கட்டத் தொழிலாளர்களுக்கான விமானப் பயணச் சீட்டுகளை, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார வழங்கிவைத்தார்.

அடுத்த சில வாரங்களில் மேலும் பத்தாயிரம் தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு அனுப்பப்படவுள்ளனர் . இதற்கு மேலதிகமாக இஸ்ரேலில் கட்டுமானத்துறையில் ஆயிரம் தொழிலாளர்களை இணைத்துக்கொள்ள இஸ்ரேல் இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-125)

# கிளிநொச்சியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 22
கிளிநொச்சி நீதிமன்றம் முன்பாக களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நீதிமன்றம் முன்பாக ஏ-9 வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் கடந்த மாதம் 27ஆம் திகதி திருடப்பட்டிருந்தது. இந்த மோட்டார்சைக்கிள் உதிரிப் பாகங்களாகப் பிரிக்கப்பட்ட நிலையில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மோட்டர்சைக்கிள் உதிரிப்பாக விற்பனையில் ஈடுபட்ட நபரொருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 14ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தியபோதே, அந்த உதிரிப்பாகங்கள் கிளிநொச்சியில் திருடப்பட்ட மோட்டார்சைக்கிளுடையது என்பது தெரியவந்ததுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (ம-113)






சேவை நலன் பாராட்டும்
Congratulations
மணிவிழா வாழ்த்துக்களும்



எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடனான
கல்விச் சேவை புரிந்து இன்று (22.12.2023)
வெள்ளிக்கிழமை ஓய்வு பெறும்
எமது மதிப்பிற்குரிய ஆசிரியர்
திரு. செல்வரத்தினம்
செல்வறஞ்சன்
SLTS-1, BA,PGDE, MATHS TRD
சேவைக்காலம்
17.08.1988 - 22.12.2023
(35 வருடங்கள்)
அவர்களது சேவையினை பாராட்டுவதோடு அவரது ஓய்வு காலம் சிறக்கவும் நீடூழி காலம் வாழ வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புச் சுற்றிவளைப்பு

# 4 நாள்களில் 8,500 கைது!

கொழும்பு, டிசெ. 22

**போதைப்பொருள்கள் மற்றும் வன்முறைகளைத் தடுக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் சிறப்புச் சுற்றிவளைப்புக்களின் விளைவாக கடந்த 4 நாள்களில் 8 ஆயிரத்து 561 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் விசேட வேலைத்திட்டம் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைய முப்படைகளின் ஒத்துழைப்புகளுடன் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அதற்கமைவாக இதுவரை (நேற்று நண்பகல் வரை) முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 8 ஆயிரத்து 561பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை போதைப்பொருள் விற்பனையாளர்களுக்குச் சொந்தமான சுமார் 9 கோடியே 20 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் இரு பஸ்கள், இரு கார்கள், இரு மோட்டார் சைக்கிள்கள், 4 காணிகள் மற்றும் வீடொன்றும் உள்ளடங்குகின்றன. அத்துடன், 2 கிலோ 400 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள், ஒரு கிலோ 200 கிராம் ஐஸ், ஒரு கிலோ 200 கிராம் கஞ்சா, 12 கிராம் ஹஷீஷ், 5 கிலோ 200 கிராம் மாவா, 17 ஆயிரத்து 54 போதைப் பொருள் மாத்திரைகள் மற்றும் 73 ஆயிரத்து 833 கஞ்சா செடிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம)

## போதைப்பொருள்களுடன் பெண்ணொருவர் கைது!

### 16 திறன்பேசிகளும் மீட்பு

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடொன்றிலிருந்து 16 திறன்பேசிகள் மற்றும் பெருமளவு போதைப்பொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபராக பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் விசேட போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே மேற்படி பெண் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான நபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-100)

## கஞ்சாவுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 22

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் பயணித்த இளைஞர் ஒருவரை வழிமறித்துச் சோதனையிட்டபோதே மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 5 கிராம் 100 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டது. (ம-125)

## விமானப் பணிப்பெண் பதவிக்கு விதிமுறைகள்

கொழும்பு, டிசெ. 22

ஸ்ரீலங்கன் விமானசேவை நிறுவனத்தில் விமானப் பணிப்பெண்கள் பதவிக்கு விண்ணப்பிப்போருக்கு தற்போது நேர்முகப் பரீட்சை நடைபெற்று வருகிறது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஆங்கிலத்தில் சரளமான தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், இடுப்புப் பகுதி ஒல்லியாக இருக்கவேண்டும், மேலும் சருமத்தில் புள்ளிகள் இருக்கக்கூடாது ஆகிய தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று துறைமுகங்கள், விமான, கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (ச-6)

## மிருசுவில் படுகொலை 23ஆம் நினைவு நேற்று!

யாழ்ப்பாணம், டிசெ. 22

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் கடந்த 2000ஆம் ஆண்டு இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட எட்டு பொதுமக்களுடைய 23ஆவது நினைவுதினம் நேற்றுப் புதன்கிழமை மிருசுவில் பகுதியில் கடைப்பிடிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் செ.மயூரனின் ஏற்பாட்டில் மேற்படி நினைவேந்தல் இடம்பெற்றது. கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உதவித் திட்டங்களும் வழங்கப்பட்டன.

மேற்படி படுகொலைகளுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிக்கு 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் அவர் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## ஜனாதிபதி புலமைப்பரிசில் விண்ணப்பம் இறுதி இன்று!

கொழும்பு, டிசெ. 22

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப்பரிசில் விண்ணப்பம் இறுதி நாள் இன்று, ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்த புலமைப்பரிசிலுக்கு ஒவ்வொரு கல்வி வலயத்திலிருந்தும் தலா 50 மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். தெரிவாகும் மாணவர்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் முதல் தடவையாக க.பொ.த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றியவர்களாக இருக்கவேண்டும். அத்துடன் விண்ணப்பதாரியின் மாதாந்த குடும்ப வருமானம் ஒரு இலட்சத்துக்குக் குறைவாக இருக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்களை ஜனாதிபதி செயலகத்திலும் *presidentsoffice.gov.lk, President¦s Fund presidentsfund.gov.lk, President¦s Media Division pmd.gov.lk.* என்ற இணையத்தள முகவரிகளிலும் தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். (ம-6)

## மரண அறிவித்தல்



**தங்கவேலு செட்டியார் கனகரத்தினம் (கனகு)**

(முன்னாள் உரிமையாளர், சாந்தி கபே)

பதுளையைப் பிறப்பிடமாகவும், கில்னர் லேன், கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேலு செட்டியார் கனகரத்தினம் நேற்று (21.12.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 914 8784

(CS 27438) S-1

## மரண அறிவித்தல்

### திருமதி தேவிகா குணரட்ணம்

தோற்றம் 08.11.1954 | மறைவு 21.12.2023



யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி. தேவிகா குணரட்ணம் அவர்கள் நேற்று (21.12.2023) வியாழக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் முத்தையா குணரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகசிங்கம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் கார்த்திகா (சட்டத்தரணி), தர்சிகா (சட்டத்தரணி - பதிவாளர், மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம், மன்னார்), அனுசிகா (உதவி பதிவாளர், வவுனியா பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆதித்தன், தர்சன், கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இந்திராணி இராமநாதன், காலஞ்சென்ற கனகசிங்கம் சிறிகாந்தா, காலஞ்சென்ற பத்மினி விக்னேஸ்வரவேல், கனகசிங்கம் மகேந்திரன், கனகசிங்கம் ரவீந்திரன், நிர்மலா மோகன், வசந்தகுமாரி கிருபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரஷானி, சாகித்தியா, தியானா, யாதனா, ஜவந்திகா, விஷ்ணுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 3.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 627 2629
125/4, A.V வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 27431) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளப் பேரிடரால் 6,738 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 22

வெள்ளப் பேரிடர் காரணமாக யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அந்தவகையில் இதுவரை 2 ஆயிரத்து 33 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 738 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெள்ளப் பேரிடர் காரணமாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 320 குடும்பங்களைச் சேர்ந்த 974 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 215 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 259 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 212 குடும்பங்களைச் சேர்ந்த 712 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 783 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 683 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 117 குடும்பங்களைச் சேர்ந்த 439 பேரும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 42 குடும்பங்களைச் சேர்ந்த 144 பேரும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேரும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேரும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேரும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 310 குடும்பங்களைச் சேர்ந்த 940 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ-ம-27)

# மயிலத்தமடு போராட்டம் 100ஆவது நாள் நாளை!

## கவனவீர்ப்புக்கும் அழைப்பு

மட்டக்களப்பு மாவட்டம், மயிலத்தமடு, பெரியமாதவனை மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராக கால்நடை பண்ணையாளர்கள் மேற்கொண்டுவரும் தொடர் போராட்டத்தின் 100ஆவது நாளை முன்னிட்டு நாளையதினம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மயிலத்தமடு, பெரியமாதவனை மேய்ச்சல் தரைப் பகுதியில் அத்துமீறி குடியேற்றப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றவாசிகள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதனால் தமிழ்ப் பண்ணையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது மேய்ச்சல்தரை உரிமையை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி தொடர் கவனவீர்ப்பு போராட்டத்தை தமிழ் பண்ணையாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர். போராட்டத்தில் 100ஆவது நாளான நாளையதினம் மயிலத்தமடு, மாதவனைப் பகுதியில் முன்னெடுக்கப்படும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள ஆதரவாளர்களைப் பங்கேற்று போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-ம-100)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு, மாவிலித்துறை றோ.க.த.க. வித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் மேற்படி பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி யூ. கிறிஸ்சாந்தி தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-66)

## புதிய...

தமிழ்க் கட்சிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே தமிழ்க் கட்சிகளிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இந்தச் சந்திப்பின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் இதன்போது தெரிவித்துள்ளார். இதற்கு, 13ஆவது திருத்தம் என்பது தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான ஒட்டுமொத்தத் தீர்வுத்திட்டம் அல்ல. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான தீர்வே தமிழர்களுக்குத் தேவை என்று இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். இதற்கு, 'தற்போது உடனடியாக அதைச் செய்ய முடியாது. அரசமைப்பில் தற்போது நடைமுறையிலுள்ள
விடயங்களைத்தான் செய்யமுடியும். அவற்றைச் செயற்படுத்த - நிறைவேற்ற நான் நடவடிக்கை எடுக்கின்றேன். அடுத்த நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு ஒரு வருடத்துக்குள் இலங்கை - இந்திய ஒப்பந்தங்களின் அடிப்படையிலான தீர்வு வழங்கப்படும்' என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர்.சம்பந்தன், எஸ்.ராசமாணிக்கம், ஜீ.கருணாகரன், கலையரசன், குலசிங்கம் திலீபன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்த்தன, வன உயிரிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.இம்.சீ.எம்.ஹேரத், சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ.பீ.ஹேரத் உள்ளிட்டவர்களும் நல்லிணக்கம் தொடர்பிலான நிறுவனங்களின் பிரதானிகளும் கலந்துகொண்டிருந்தனர். (அ-ம-125)

## நல்லிணக்கக்...

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு ஊடாக காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்குத் தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தபோது, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்த ஆணைக்குழு தமது பிரச்சினைக்கான தீர்வல்ல என்று திட்டவட்டமாகத் தெரிவித்து அதை நிராகரித்துள்ளனர். அதே நிலைப்பாட்டிலேயே நாமும் உள்ளோம். உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவிடம் நீதியான பொறிமுறை இல்லை. ஆதலால், சர்வதேசத்தின் மேற்பார்வையில்தான் இது இடம்பெற வேண்டும் என்று கூட்டமைப்பின் எம்.பி.க்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு, அரசமைப்புக்கு முரணான விடயங்களைச் செய்யமுடியாது. அடுத்த வருடம் இந்த ஆணைக்குழு கட்டாயம் நடைமுறைப்படுத்தப்படும் என்று ரணில் தெரிவித்துள்ளார். இதற்கு, 'நீங்கள் நடைமுறைப்படுத்துவதை நடைமுறைப் படுத்துங்கள். ஆனால் நாங்கள் ஏற்கவில்லை' என்று கூட்டமைப்பு எம்.பி.க்கள் தெரிவித்தனர். (அ-ம-125)

## ஜனாதிபதித்...

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதில் தற்போதைய ஜனாதிபதி ரணில் கொண்டிருக்கும் திறன் தொடர்பில் எனக்குச் சிறிதளவும் நம்பிக்கை இல்லை. தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மைத்திரி - ரணில் தலைமையிலான கூட்டாட்சி அரசாங்கமே காரணம். ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில்தான் நாட்டின் கடன்சுமை பலமடங்காக அதிகரித்தது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாட்டில் பொதுத்தேர்தல் இடம்பெறும். பொதுஜன பெரமுன சொந்த வேட்பாளரையே நிறுத்தும். பொது வேட்பாளராக ரணிலை பெரமுன நிறுத்தாது - என்றார். (அ-ம)

## பொது...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சிங்கள பெரும்பான்மைக் கட்சிகளை நம்பி ஏமாந்து செல்கின்றோம். எனவே எமது நிலைப்பாட்டினை ஒட்டுமொத்தமாக வெளிக்காட்டும் முகமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை பொதுவேட்பாளராக
முன்னிறுத்தவேண்டும். ஒலிம்பிக்கில் சாதனை படைத்த எதிர்வீரசிங்கம் என்பவரை பொது வேட்பாளராக நிற்குமாறு நான் கோரியிருந்தேன். தனது சுகவீனம் காரணமாக தன்னால் வேட்பாளராக முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

நான் பொதுவேட்பாளராக நிற்பேனா என்று ஊடகவியலாளர்கள் கேட்கின்றனர். அரசியலுக்கு நானாக வரவில்லை. என்னைக் கொண்டுவந்தனர். தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு வழியாக இது அமைந்தால் நிச்சயம் அது தொடர்பில் சிந்திப்பேன். தமிழர்கள் பொதுவேட்பாளராக ஒருவரை நியமிக்கவேண்டும். இல்லையேல் வாக்களிப்பிலிருந்து விலகவேண்டும் - என்றார். (அ-ம-125)

## 13 இந்திய...

3 படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட மேற்படி 13 மீனவர்களும் கடந்த 6ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு எதிரான வழக்கின் விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே அவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை - குறித்த மூன்று படகுகளின் உரிமையாளர்களுக்கு வெளிவிவகார அமைச்சகத்தின் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. படகுகள் தொடர்பான வழக்கு வரும் ஆண்டு மார்ச் 11ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அன்றையதினம் படகை உரிமைகோரும் ஆவணத்துடன் படகுகளின் உரிமையாளர்கள் முன்னிலையாக வேண்டும். (அ-ம-100-66)

## ஈழத்தமிழ்...

டுள்ளது. இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம்பெறவுள்ளனர்.

தமிழகம் மண்டபம் அகதி முகாம் உள்ளிட்ட பல்வேறு முகாம்களில் 90 ஆயிரம் ஈழத்தமிழ் அகதிகள் உள்ள நிலையில், அவர்களில் இலங்கைக்குத் திரும்ப விரும்புவோரைச் சந்தித்து - ஒருங்கிணைத்து - அவர்கள் இலங்கையில் வாழ்வதற்கான ஏற்றதான நிலைமைகளை ஏற்படுத்துவதை இந்தக் குழு முதன்மை நோக்கமாகக் கொண்டு செயற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

## துறைமுக...

தமிழ்க் கட்சிகளுடனான நேற்றைய சந்திப்பின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் என்பன முக்கியத்துவம் கருதி விரைவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. பலாலி விமான நிலைய ஓடுபாதையில் விரிவாக்கல் பணிகள் இந்தியாவின் கடனுதவிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவுள்ளன என்றும் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

முன்னதாக, பலாலி விமானநிலைய ஓடுபாதை அபிவிருத்திக்கு தனியார் துறையினரின் உதவியை அரசாங்கம் நாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## 6 நாள்களில்...

இந்த மாதத்தின் முதல் 20 நாள்களில் மட்டும்டெங்குக் காய்ச்சல் பாதிப்புடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக 268 பேர் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விமானம் நடுவானில் பழுது!

கொழும்பு, டிசெ.22

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மீண்டும் தரையிறக்கப்பட்டது.

201 பயணிகளை ஏற்றிச் சென்ற விமானத்தின்ல் புறப்பட்ட பத்து நிமிடங்களில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதையடுத்தே விமானிகள் மீண்டும் விமானத்தைப் பாதுகாப்பாக தரையிறக்கியுள்ளனர்.

விமானத்தைப் பழுதுபார்ப்பதற்காக வெளிநாட்டுக்குக் கொண்டுசென்றால் பெரும் தொகையான நிதியை செலவு செய்யும் சூழ்நிலை காணப்பட்டதால் விமானத்தை மீண்டும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# சம்பளம் அதிகரிக்காவிடில் தொழிற்சங்க நடவடிக்கை!

## துறைமுக பொது ஊழியர் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ.22**

**மூன்று வருடங்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பிலான வேலைத்திட்டத்தை அரசாங்கம் அறிவிக்காவிட்டால் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று துறைமுக பொது ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.**

ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் நிரோஷன் கோரகான தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட சம்பள உடன்படிக்கைகள் இந்த மாதம் 31ஆம் திகதி முடிவடைவதால் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் அடுத்த மூன்று வருடங்களுக்கான புதிய சம்பள ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவேண்டும். ஆனால், இதுவரையில் சம்பள அதிகரிப்பு ஒப்பந்தத்தைத் தயாரிக்க முடியவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் துறைமுக ஊழியர்களின் சம்பள உயர்வு அறிவிக்கப்படவில்லை. அது தொடர்பான வேலைத்திட்டத்தை அடுத்த 7 நாள்களுக்குள் அறிவிக்க வேண்டும். இல்லையேல் 28ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# நாவாந்துறையில் டெங்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்.மாநகர நாவாந்துறைப் பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் கூடுதலாகக் காணப்படும் நிலையில் அந்தப் பகுதியில் நுளம்புக் கட்டுப்பாடு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் சுகாதாரப் பிரிவினரால் குடியிருப்புப் பகுதியை சோதனையிடும் நடவடிக்கை மற்றும் கண்காணிப்புப் பணிகள் என்பன தினமும் இடம்பெற்று வருகின்றன. துப்புரவு இல்லாத குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்படுவதுடன் குடியிருப்புகளைத் துப்புரவு செய்யாது அசண்டையீனமாக இருந்த 6 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)

**வேலையாள் தேவை**

கிளிநொச்சியில் உள்ள மாட்டுப் பண்ணையில் பால் கறக்கக்கூடிய நன்கு அனுபவமுள்ள வேலையாள் ஆண் / பெண் தேவை.சம்பளம் 40000/-.
3 நேர சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு.
விரும்பமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்
தொடர்பு: 077 031 0944
077 538 1642

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் எனும் புத்தகசாலைக்கான வேலைவாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு :077 494 9683
077 077 6469

# தடம்புரண்டது டிங்கிரி மெனிகே

நானுஓயாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த டிக்கிரி மெனிகே பயணிகள் ரயில் தடம்புரண்டுள்ளது.

ஹற்றன் மற்றும் கொட்டகலை புகையிரத நிலையங்களுக்கு இடையில் சிங்கமலை புகையிரத சுரங்கப்பாதைக்கு அருகில் 109 மைல்கல்லுக்கு அருகில் ரயிலின் 3 பெட்டிகள் தடம்புரண்டுள்ளன என்று நாவலப்பிட்டி புகையிரத கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது. (எ-இ)

**சிறிராம் ஜுவல்லர்ஸ்**

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு இறுதியை முன்னிட்டு
தங்க ஆபரணங்களுக்கான



* செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
* அனைத்து விதமான 22 கரட் தங்க ஆபரணங்களுக்கும் யாழில் எங்கும் இல்லாத விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

**Box chain = 167750/=**

* அனைத்து ஆபரணங்களும் 22 கரட் என உறுதிப்படுத்தி தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களில் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

இச்சலுகை இம்மாதம் 30ஆம் திகதிவரை மட்டுமே

தொடர்புக்கு: 077 163 1729
077 7730 567
021 222 8334



**இணுவில் திருப்பதி**

**அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலயம்**

**இணுவில், மருதனார்மடம்.**

**சுவர்க்க வாசல் ஏகாதசி**

**- 2023 -**

**காலம்:**

**நாளை (23.12.2023) சனிக்கிழமை**

**அதிகாலை 5.50 மணிக்கு பெருங்கதவு திறக்கப்பட்டு பெருமாளின் விஸ்வரூப தரிசனம் ஆரம்பமாகும்**

காண வாரீர் அடியார்களே!
அவர் பேரழகு கண்டு, பேரானந்தம் அடைவோமாக!
ஓம் நமோ நாராயணாய!

ஆலய அறங்காவலர்
ச. கணேசலிங்கம்.
021 224 2300

இணுவில் திருப்பதி



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org